மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிண்டி பொறியியல் கல்லூரியில் தொழில் நுட்பக் கல்வியை விரிவுபடுத்த சோவியத் வல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், ஆசிரியர்களை பயிற்சிக்காக சோவியத் யூனியனுக்கு அனுப்பவும், முதுகலைப் படிப்பு மற்றும் பிஎச்.டி. கல்வித் துறையில் ஆராய்ச்சி வசதிகளை நிறுவ அந்நாட்டிலிருந்து வேண்டிய தளவாடங்களை இறக்குமதி செய்யவும், சோவியத் யூனியன் உதவி கோரி, மத்திய அரசுக்கு இவ்வரசு கடிதம் எழுதியுள்ளது. இதுவரை எதும் உதவி கிடைக்கவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Every year hundreds of students are coming out of polytechnics. May I know from the Hon. Minister whether any arrangement has been made to provide them with appointments?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட நிலைமை இல்லை. படித்துத் தேறி வருகிறவர்களுக்குப் போதுமான வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதற்காக சில இடங்களில் சாண்ட்விச் கோர்ஸ் என்றும், பிறகு அப்ரென்டிஸ்ஷிப் என்றும் இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இப்பொழுது இல்லை. இப்பொழுது ஓரளவு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

Building for Nagercoil Municipal Council

* 88 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to put up new construction to house the Nagercoil Municipal Council; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

வந்தவாசி வட்டாரத்தில் தீவிர வேலைவாய்ப்புத் திட்டம்.

* 89 வின.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்திற்கு தீவிர வேலைத் திட்டத்தில் (cresh Programme) 1971-72 ஆண்டுக்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?

1972 ஆகஸ்ட் 12]

(இ) 1972 ஜனவரி மாதம் 13, 14, 15, 16-ந் தேதிகளில் அதில் எத்தனை பேர்கள் வேலை செய்தார்கள்? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலித்தொகை மேலே குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *(அ) 1971-72-ல் வந்தவாசி வட்டாரத்திற்கு ரூ. 1.25 லட்சம் ஒதுக்கப்பட்டது.*

(இ) 1972-ஆம் ஆண்டு ஜனவரி 13, 14, 15, 16 தேதிகளில் இத்திட்டத்தின் கீழ் பணி புரிந்தவர்களின் எண்ணிக்கைபற்றிய புள்ளிவிவரமும், அந்த நாட்களில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியங்களும் வருமாறு :—

நாள்.	நபர்கள்.	அளிக்கப்பட்ட ஊதியம்.
(1)	(2)	(3)
1972 சனவரி 13ம் தேதி ..	426	1,278·00
1972 சனவரி 14ம் தேதி ..	427	1,281·00
1972 சனவரி 15ம் தேதி ..	427	1,281·00
1972 சனவரி 16ம் தேதி	427	1,281·00
மொத்தம் ..	1707	5,121·00

பள்ளிகளில் மத போதனை.

* 90 வினா—**திரு. என். கிட்டப்பா :** *மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

கல்வியின் பெயரால் பள்ளிகளில் நடைபெறும் மத போதனைகளை அகற்றிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *இந்திய அரசியல் சட்டத்தின் படியும் தமிழ்நாட்டுக் கல்வி விதிகளின்படியும் அரசுக் கல்வி நிலையங்களிலும் உள்ளாட்சி மன்றக் கல்வி நிலையங்களிலும் பொதுவாக மதபோதனை செய்யத் தடை உள்ளது.*

அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசு மானியம் பெறும் தனியார் கல்வி நிலையங்களிலும் எந்தெந்த மாணவர்கள் (அவர்கள் வயது வராதவர்களாயிருப்பின் அன்னார் காப்பாளர்கள்) மத போதனை பெற ஒத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே சில நிபந்தனைகளுக்குட்பட்டு மத போதனை அளிக்கலாம்; அத்தகைய மத போதனையை கல்வி நிலைய வேலை நேரத்தில் அளிக்கக்கூடாது.